**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் மார்கழி 27–ஆம் நாள் ஆங்கில வருடம் 2021 ஜனவரி 11– ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**(கோப்பு எண். 1746/ 2019 / எப் 1)**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண். 1007/1D மற்றும் 1007/2A-ல் 1.86 ஏக்கர் அல்லது **7530.00** சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி **1.** திருமதி. M.கலைமதி க/பெ. A.G.G. மணிவண்ணன், **2.** திரு. K.R. பத்தாவுல்லா, த/பெ K.M. அப்துல் ரசாக், **3.** திரு. P. கோகுலன், த/பெ K.R. பெரியசாமி, .4. M. துரைசாமி , த/பெ மாரப்ப கவுண்டர், **5.** திரு .C. தங்கராஜ், த/பெ. சின்னசாமி மற்றும் **6.** திரு . காதர் சாமுனா லெப்பை, த/பெ. ஹல்லாஜி ஆகியோர் 10.12.2019 அன்று விண்ணப்பித்தனர். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க.எண். **1746**/2019/எப்1, நாள் 19.12.2019–ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 3655/2019/திம1 நாள். 28.05.2020–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின் பகிர்மானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 28.10.2020 –ம் தேதிய அறிக்கை மற்றும் சான்றில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும் மற்றும் அடிப்படை வசதிகள் மழைநீர் வடிகால், சிறுபாலம், குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்றும் சான்று வழங்கியுள்ளார்.

மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3581/2020, நாள் 01.09.2020 –ன் மூலம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானபத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 3274/2020 நாள் 20.08.2020 –ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் **1696** நாள்.**29.10.2020** மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் (மூலை முடக்கு உட்பட), பொது ஒதுக்கீட்டிற்கான இடம் ஆகியவற்றை தானமாக பெற மன்றம் ஏற்கலாம் எனவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.2,00,000/– ஐ இந்நகராட்சிக்கு கரூவூலத்தில்

செலுத்த அறிவிப்பு வழங்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்கான தொகை ரூ.**2,00,000/–** பற்றுச்சீட்டு எண் 158/158/03/20-21/0009881, நாள். 12.11.2020 –ல் நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், மேற்பார்வை பொறியாளர், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், இந்நகர்மன்ற தீர்மானம் நகல் நகராட்சி பொறியாளர் சான்று மற்றும் தெருவிளக்குகள் அமைக்க செலுத்தப்பட்ட தொகைக்கான இரசீது நகல் ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 1746/2019/எப்1 நாள்: 24.11.2020–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண்.3655/2019/திமா நாள். 05.12.2020 –ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (திமா) எண் **210/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1746/2019/எப்1, நாள். 29.12.2020–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.12295/–, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – **ரூ.** 20000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 42320/- மற்றும் காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.**13398**/ ஆகியவை முறையே பற்றுச்சீட்டு எண் 158/01/20-21/0000865 மற்றும் 158/01/20-21/0000866 நாள் 02.01.2021 மற்றும் நிலப்பயன்மாற்ற கட்டணம் ரூ.**1000/–** பற்றுச்சீட்டு எண் 158/01/20-21/0000867 நாள் 02.01.2021 வாயிலாக நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.2,04,440/– காங்கயம் சார் நிலைக் கரூவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.**009**, நாள். 04.01.2021 வாயிலாக மனைப்பிரிவுதாரரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவை காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் உத்திரவு டி.ஆர்.எண் 2021/32/05/000306SD, நாள். 20.08.2020 படி புல எண் 1007/1D2, 1007/1D4, 1007/1D6, 1007/2A2, 1007/2A4, மற்றும் 1007/2A6 -ல் என ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயரில் புதிய உட்பிரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டா எண் 13870 என எண்ணிடப்பட்டு பட்டா மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் **1.** திருமதி. M.கலைமதி க/பெ. A.G.G. மணிவண்ணன், **2.** திரு. K.R. பத்தாவுல்லா, த/பெ K.M. அப்துல் ரசாக், **3.** திரு. P. கோகுலன், த/பெ K.R. பெரியசாமி, .4. M. துரைசாமி , த/பெ மாரப்ப கவுண்டர், **5.** திரு .C. தங்கராஜ், த/பெ. சின்னசாமி மற்றும் **6.** திரு . காதர் சாமுனா லெப்பை, த/பெ. ஹல்லாஜி ஆகியோர் தனது **07.01.2021** ஆம் தேதிய மனுவில் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் 1007/1D மற்றும் 1007/2A-ல் 1.86 ஏக்கர் அல்லது **7530.00** சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1745. நாள்.11.01.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:2

(கோப்பு எண். 1747/ 2019 / எப் 1)

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண். 1007/1F மற்றும் 1007/2C-ல் 2.14 ஏக்கர் அல்லது 8684.00 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி 1. திருமதி. M.கலைமதி க/பெ. A.G.G. மணிவண்ணன், 2. திரு. K.R. பத்தாவுல்லா, த/பெ K.M. அப்துல் ரசாக், 3. திரு. P. கோகுலன், த/பெ K.R. பெரியசாமி, .4. M. துரைசாமி , த/பெ மாரப்ப கவுண்டர், 5. திரு .C. தங்கராஜ், த/பெ. சின்னசாமி மற்றும் 6. திரு . காதர் சாமுனா லெப்பை, த/பெ. ஹல்லாஜி ஆகியோர் 10.12.2019 அன்று விண்ணப்பித்தனர். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க.எண். 1747/2019/எப்1, நாள் 19.12.2019–ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பூர் அவர்களின் கடித ந.க எண் 3656/2019/திம1 நாள். 28.05.2020–ல் குடியிருப்பு மனைப்பிரிவின் பொது உபயோகம், மின் பகிர்மானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மற்றும் உத்தேச சாலைகளுக்கான அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்கவும், மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள TANGEDCO –ற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான விபரம் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக செய்யப்பட்டுள்ளது என்று நகராட்சி பொறியாளரின் சான்றுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. மேலும் மேற்கண்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 1920–ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 175,176,177,178 மற்றும் 179, மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 47(11) –ன் படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்குமாறு மனைப்பிரிவுதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் தனது 28.10.2020 –ம் தேதிய அறிக்கை மற்றும் சான்றில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும் மற்றும் அடிப்படை வசதிகள் மழைநீர் வடிகால், சிறுபாலம், குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்றும் சான்று வழங்கியுள்ளார்.

மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3580/2020 நாள் 01.09.2020 –ன் மூலம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 3275/2020 நாள் 20.08.2020 –ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் 1697 நாள்.29.10.2020 மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் (மூலை முடக்கு உட்பட), பொது ஒதுக்கீட்டிற்கான இடம் ஆகியவற்றை தானமாக பெற மன்றம் ஏற்கலாம் எனவும், தெருவிளக்குகள் அமைக்க ரூ.80,000/– ஐ இந்நகராட்சிக்கு கரூவூலத்தில் செலுத்த அறிவிப்பு வழங்கலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்கான தொகை ரூ.80,000/– பற்றுச்சீட்டு எண் 158/158/03/20-21/0009882, நாள். 12.11.2020 –ல் நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து காங்கயம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், மேற்பார்வை பொறியாளர், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட ஆவணம் நகல், இந்நகர்மன்ற தீர்மானம் நகல் நகராட்சி

பொறியாளர் சான்று மற்றும் தெருவிளக்குகள் அமைக்க செலுத்தப்பட்ட தொகைக்கான இரசீது நகல் ஆகியவற்றை இணைத்து இவ்வலுவலக கடிதம் ந.க எண் 1747/2019/எப்1 நாள்: 24.11.2020–ன் வாயிலாக மேல் நடவடிக்கைகாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண்.3656/2019/திமா நாள். 05.12.2020 –ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு **ம.வ/ந.ஊ (திமா) எண் 211/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1747/2019/எப்**1**, நாள். 29.12.2020 –ன் வாயிலாக மனைப்பிரிவுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் – ரூ.13026/–, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – **ரூ. 3**0000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 52104/- மற்றும் காலிமனை வரிக்கான தோராய தொகை ரூ.14812/ ஆகியவை முறையே பற்றுச்சீட்டு எண் 158/01/20-21/0000868 மற்றும் 158/01/20-21/0000869 நாள் 02.01.2021 மற்றும் நிலப்பயன்மாற்ற கட்டணம் ரூ.**1000/–** பற்றுச்சீட்டு எண் 158/01/20-21/0000870 நாள் 02.01.2021 வாயிலாக நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவுதாரரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.2,35,771/– காங்கயம் சார் நிலைக் கருவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.**008** நாள். 04.01.2021 வாயிலாக மனைப்பிரிவுதாரரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவை காங்கயம் வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் உத்திரவு டி.ஆர்.எண் 2021/32/05/000304SD, நாள். 07.01.2021 படி புல எண் 1007/1F2, 1007/1F4, 1007/1F6, 1007/2C2 மற்றும் 1007/2C5 என ஆணையாளர், காங்கயம் நகராட்சி என்ற பெயரில் புதிய உட்பிரிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டா எண் 13870 என எண்ணிடப்பட்டு பட்டா மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் **1.** திருமதி. M.கலைமதி க/பெ. A.G.G. மணிவண்ணன், **2.** திரு. K.R. பத்தாவுல்லா, த/பெ K.M. அப்துல் ரசாக், **3.** திரு. P. கோகுலன், த/பெ K.R. பெரியசாமி, .4. M. துரைசாமி , த/பெ மாரப்ப கவுண்டர், **5.** திரு .C. தங்கராஜ், த/பெ. சின்னசாமி மற்றும் **6.** திரு . காதர் சாமுனா லெப்பை, த/பெ. ஹல்லாஜி ஆகியோர் தனது **07.01.2021** ஆம் தேதிய மனுவில் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ. சர்வே எண் 1007/1F மற்றும் 1007/2C-ல் 2.14 ஏக்கர் அல்லது **8684.00** சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1746 . நாள்.11.01.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**<u>ந.க.எண்.593 / 2017/ டி1</u>**

காங்கயம் நகராட்சியில் **2020–2021** – ஆம் நிதியாண்டிற்கு பொதுப்பிரிவு, பொறியாளர் பிரிவு, கணினி பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர் நிரப்ப வேண்டியுள்ளது. இதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.**1,50,000/–** (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1747 . நாள்.11.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண். 2008 /2018/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பலன் தரும் மரங்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானபலன் தரும் மரங்களுக்கு பொதுஏலம் விடுவதற்குகீழ்கண்டபட்டியல்மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பலன் தரும் மரங்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| **தண்ணீர் பந்தல்** | | |
| 1 | தென்னைமரம் | 16 |
| 2 | மாமரம் | 2 |
| 3 | நாவல்மரம் | 1 |
| 4 | இலவம் பஞ்சுமரம் | 2 |
| 5 | புளியமரம் | 1 |
| | **மொத்தம்** | **22** |
| **ஐ.பி.டேங்க் திருப்பூர் ரோடு** | | |
| 1 | தென்னைமரம் | 5 |
| 2 | மாமரம் | 2 |
| 3 | நாவல்மரம் | 1 |
| | **மொத்தம்** | **8** |
| **அலுவலகம்** | | |
| 1 | தென்னைமரம் | 4 |
| | **மொத்தம்** | **4** |
| **சந்தைப்பேட்டை** | | |
| 1 | புளியமரம் | 42 |
| | **மொத்தம்** | **76** |

மொத்தம் 76 மரங்கள் நகராட்சிக்கு சொந்தமாக உள்ளது மற்றும்

1. ஈரோடு – காங்கயம் சாலை கி.மீ.42/2 முதல் 44/2 வரை உள்ள புளிய மரங்கள்
2. காங்கயம்– தாராபுரம் சாலை கி.மீ.55/0 முதல் 51/6 வரை உள்ள புளிய மரங்கள்
3. காங்கயம் – கோவை சாலை கி.மீ.57/6 முதல் 61/4 வரை உள்ள புளிய மரங்கள்

மேற்கண்டுள்ள நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பலன் தரும் மரங்கள் மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான பலன் தரும் மரங்கள் பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பலன் தரும் மரங்களை ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் மரங்களின் பலன் தரும் காலம் முடிவடைய உள்ளதால் உடன் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1748 . நாள்.11.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**(கோப்பு எண். 1857/ 2020 / எப்1)**

காங்கயம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு. சென்னியப்பன் (எ) சென்னிமலை கவுண்டர் என்பவர் ஆணையாளர், காங்கயம் நகராட்சி (3–ம் பிரதிவாதி) –க்கு எதிராக அசல் வழக்கு எண் 217/2020–ல் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம், ரீ. சர்வே எண் 589/4A, Godown Building – For Purpose warehouse கட்டிடம் கட்ட இவ்வலுவலக கோப்பு ந.க எண் 1439/2020/எப்1, மூலம் தொழில் நுட்ப அனுமதி பெற பரிந்துரை செய்யக் கோரிய மனுவின் அணுகுசாலையாக காண்பிக்கப்பட்டுள்ள பொது பாதையின் உரிமை தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் திரு. மோகன்ராஜ் வழக்கறிஞர் அவர்களை நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும், மேற்படி வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1749 . நாள்.11.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**(கோப்பு எண். 1592/ 2020 / எப்1)**

திருப்பூர் மாவட்டம், காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.சர்வே எண் 168/2–ல் நகர் ஊரமைப்பு துறையினதால் அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ம(சே) எண் 1118/2018 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவில் மனை எண்கள் 15 மற்றும் 16 ஆகிய இரண்டு மனைகளையும் இணைத்து ஒரே குடியிருப்பு கட்டிடமாக கட்ட பிரதிவாதிகள் 5 மற்றும் 6 ஆகியோருக்கு இவ்வலுவலக உத்திரவு க.வி எண் 158/CP/19-20/0000048, பி.ஏ எண் 158/BPA/2019/00105, உ. ஆணை 158/BL/2019/00047, நாள்.07.06.2019–ல் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனை எண் 15–ல் குடியிருப்பு கட்டிடமும், மனை எண்16–ல் மத வழிபாட்டு கட்டிடமும் கட்டி வருவதாக தெரிய வந்ததால் திரு. வி. மோகன் பிரதீப் த/பெ. எம். எஸ். விஸ்வநாதன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மதவழிபாட்டு கட்டிடம் கட்டுவதை எதிர்த்து காங்கயம் நகராட்சி ஆணையாளருக்கு (4–ம் பிரதிவாதி) எதிராக வழக்கு W.P No. 18230-2020 –ல் தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் திரு. எம். வேணுகோபால், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கும், வழக்கறிஞர் கட்டணத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1750 . நாள்.11.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**ந.க.எண்.120 /2021 /எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 12 முடிய உள்ள தெருக்களில் துப்பரவு பணி மேற்கொள்வதற்கும், 129 தற்காலிக துப்பரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க எண் K.Dis.No 28369/J3 நாள் 04.12.2018ன் படி உத்திரவிடப்பட்டுள்ளதின் படியும், இந்நகர்மன்ற தீர்மான எண்

1496/2020 நாள்.30.11.2020ன் படி 129 துப்பரவு பணியாளர்களை வார்டு எண் 1 முதல் 12 முடிய துப்பரவு பணிகளை மேற்கொள்ள திருவாளர்.எஸ்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை எனும் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு 129 ஒப்பந்த பணியாளர்களை சப்ளை செய்து வருகின்றனர்.

தற்போது மேற்கண்ட வேலை உத்திரவு 06.02.2021 –ந் தேதியுடன் முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு 07.02.2021 ந் தேதி முதல் 06.02.2022 வரை வேலை உத்திரவை நீட்டிப்பு செய்து தர கோரி சம்மந்தப்பட்ட நிறுவனத்தினர் கடிதம் கொடுத்ததின் போரில் பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படாத வண்ணம், பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாலும், தமிழக சட்டமன்ற தேர்தல் விரைவில் வரவுள்ளதாலும், பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு 129 ஒப்பந்த பணியாளர்களை சப்ளை செய்ய திருவாளர்.எஸ்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை எனும் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
உத்தேச செலவினம் ரூ.258 இலட்சம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட ஊதியத்தை பொதுநிதியில் வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1751 . நாள்.11.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி

**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் தை16–ஆம் நாள் ஆங்கில வருடம் 2021ஜனவரி 29–ஆம் தேதி வெள்ளிகிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.17/2020/அ2**

2020–2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2016–2017 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகையிலிருந்து தாங்கள் செலுத்த வேண்டிய குத்தகை தொகைக்கு ஈடு செய்து கொண்டு மீத தொகை வழங்க கோரியுள்ளார்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | கடை வாடகை தொழில் வரி மற்றும் அபராத தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தங்கவேல் | சென்னிமலை ரோடு வாரச்சந்தை கடை எண்.4 | 2011–12 | 21 | 105 | 50000 | 32750 | 17250 |
| 2 | எஸ்.ரவி | சென்னிமலை ரோடு பூக்கடை எண்.4 | 2016–17 | 48 | 133 | 67200 | 43662 | 23538 |

மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய கடை வாடகை மற்றும் தொழில் வரி தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகையினை பொது நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1752 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண் : 00057 /2021/இ1**

தமிழ்நாடு அரசு நிதித்துறை (SFC – MC) அரசாணை எண்.368, நாள். 07.10.2020– ல் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் பட்ஜெட் அமர்வு 2020–21 நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சிறிய பணிகளை அடிப்படை கட்டமைப்புகள் நிதியின் கீழ் மேற்கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி காங்கயம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னிமலை சாலை கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையத்தின் கிழக்குபுறம் சுற்றுச் சுவர் கட்டுதல் | 10.00 |
| 2 | திருப்பூர் சாலை மெயின் சாலையில் தெருவிளக்கு அமைத்தல் | 50.00 |

மேற்படி பணிகளில் காங்கயம் நகராட்சியில் சென்னிமலை சாலையில் அமைக்கப்பட்டுள்ள கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையத்தின் நான்கு பகுதிகளில் மூன்று பகுதிகளில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கப்படவில்லை. எனவே, இப்பகுதியில் வெளியாட்கள் நுழையும் அபாயம் உள்ளது. இதை தவிர்க்கும் பொருட்டு சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மற்றும் திருப்பூர் சாலை மெயின் சாலையில், சாலையின் இரு புறங்களிலும் தெருவிளக்குகள் இடைவெளிவிட்டு அமைக்கப்பட்டுள்ளன. எனவே, சாலையின் நடுப்பகுதியில் போதிய வெளிச்சம் இல்லாததால் வாகன ஓட்டிகளுக்கு சிரமமாக உள்ளது. மேலும், அடிக்கடி விபத்துகள் ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. எனவே, திருப்பூர் ரோடு பகுதியில் சென்டர் மீடியன் தெருவிளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

எனவே, இவ்விரண்டு பணிகளையும் அடிப்படை கட்டமைப்புகள் திட்டம் 2020–21ன் கீழ் மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கான திட்டப்பிரேரணை தயார் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1753 . நாள்.29.01.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண் : 1130/2020 /இ1**

காங்கயம் நகராட்சி சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021–.ன் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 அண்ணாமலை நகர் 2வது மெயின் வீதியில் தார்சாலை அமைத்தல், வார்டு எண்.4 மூர்த்திரெட்டி பாளையம் குறுக்கு வீதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.5 ராஜாஜி வீதி, மஜீத் வீதி, வார்டு எண்.6 அய்யாச்சாமி நகர் காலனி 4வது மெயின் மற்றும் குறுக்கு வீதி, பொதிகை நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.7 கங்கா நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.9 அகிலாண்டபுரம் முதல் முத்தூர் பிரிவு ரோடு வரை, அருள் ஜோதி நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.10 பொன்னி நகர் மெயின் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வார்டு எண்.4 முஸ்லீம் வீதி மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் சிமெண்ட் சாலை சீரமைத்தல் பணிக்கு 21.01.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | M/s.ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் |
| 2) | M/s.சபரி கன்ஸ்ட்ரக்ஷன் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 25.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s.ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் | 8.95% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s.சபரி கன்ஸ்ட்ரக்ஷன் | 12.17% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.1130/ 2020 / இ1, நாள். 25.01.2021–.ன் மூலம் கோரப்பட்டது.ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை இனம் வாரியாக விலைக்குறைப்பு செய்து

விலைக்குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார். இந்த விலைவிபரத்தினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்கு செய்யும் பொழுது மதிப்பீட்டு விலையைவிட 4.98 %கூடுதலாக விலைவிகிதம் உள்ளது. இந்த விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுடுகறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s.ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் அவர்களின் **4.98%** மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி விலைவிகிதத்தின் அடிப்படையில் மதிப்பீட்டைவிட கூடுதலாக ஏற்படும் செலவினம் தொகையை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1754. நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண் : 1130/2020 /இ1**

காங்கயம் நகராட்சி சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021–.ன் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சென்னிமலை ரோடு மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.1 திரு.வி.க நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதி, வாய்க்கால் மேடு மெயின் வீதிகள், வார்டு எண்.2 திருவள்ளுவர் வீதி மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.3 சின்னாய் புதுார் ரோடு, சின்னாய்புதுார் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், திருமலை நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள் , அண்ணாமலை நகர் முதல் மெயின் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வார்டு எண்.2 பட்டேல் மெயின் வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் சிமெண்ட் சாலை சீரமைத்தல் பணிக்கு 21.01.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | M/s.சபரி கன்ஸ்டக்ஷன் |
| 2) | M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 25.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s.சபரி கன்ஸ்டக்ஷன் | 6.37% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் | 14.68% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s.சபரி கன்ஸ்டக்ஷன் அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s.சபரி கன்ஸ்டக்ஷன் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.1130/ 2020 / இ1, நாள். 25.01.2021–.ன் மூலம் கோரப்பட்டது.ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை இனம் வாரியாக விலைக்குறைப்பு செய்து விலைக்குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார். இந்த விலைவிபரத்தினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்கு செய்யும் பொழுது மதிப்பீட்டு விலையைவிட 4.90 %கூடுதலாக விலைவிகிதம் உள்ளது. இந்த விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுடுகறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s. சபரி கன்ஸ்ட்க்ஷன் அவர்களின் 4.90% மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி விலைவிகிதத்தின் அடிப்படையில் மதிப்பீட்டைவிட கூடுதலாக ஏற்படும் செலவினம் தொகையை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1755 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 1130/2020 /இ1**

காங்கயம் நகராட்சி சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021–.ன் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 தாராபுரம் ரோடு குறுக்கு வீதி, பங்களாபுதூர் ரோடு குறுக்கு வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.11 ஆசிரியர் காலனி குறுக்கு வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.10 குதிரைப்பள்ளம் ரோடு, வார்டு எண்.14 எல்.ஜி.ஜி.எஸ் காலணி மெயின் மற்றும் குறுக்கு வீதி, காமராஜர் வீதி, வார்டு எண்.15 திருநீலகண்டர் வீதி மற்றும் சுபாஷ் வீதி, வார்டு எண்.16 புதுவிநாயகர் கோவில் குறுக்கு வீதி, வனிதா கல்வி நிலையம் வீதி, வார்டு எண்.18 சௌடாம்பிகை நகர் குறுக்கு வீதிகள் ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வார்டு எண்.14 மா.பொ.சி வீதியில் சிமெண்ட் சாலை சீரமைத்தல் பணிக்கு 21.01.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் |
|---|---|
| 1) | M/s.ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் |
| 2) | M/s.சபரி கன்ஸ்ட்ரக்ஷன் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 25.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s.ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் | 8.72% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s.சபரி கன்ஸ்ட்ரக்ஷன் | 11.89% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் கன்ஸ்ட்க்ஷன் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.1130/ 2020 / இ1, நாள். 25.01.2021–.ன் மூலம் கோரப்பட்டது.ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை இனம் வாரியாக விலைக்குறைப்பு செய்து விலைக்குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார். இந்த விலைவிபரத்தினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்கு செய்யும் பொழுது மதிப்பீட்டு விலையைவிட 4.95 %கூடுதலாக விலைவிகிதம் உள்ளது. இந்த விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுடுகறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s.ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா(பி) லிமிடெட் கன்ஸ்ட்க்ஷன்அவர்களின் 4.95% மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி விலைவிகிதத்தின் அடிப்படையில் மதிப்பீட்டைவிட கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகை ரூ.1,45,017/—யை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1756 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 1504 /2020/இ1**

தாளக்கரையில் அமைக்கப்பட்டுள்ள அமராவதி குடிநீர் திட்ட தலைமை நீரேற்று நிலையத்தின் தண்ணீர் சேகரிக்கும் கிணற்றில் அமராவதி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மண் சேர்ந்துள்ளது. இதனால், குடிநீர் எடுக்க இயலாத நிலையில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த கிணற்றில் மணல் எடுத்து சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர்நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1757 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 593/2017/டி1**

காங்கயம் நகராட்சியில் 2020—2021—ஆம் நிதியாண்டிற்கு பொதுப்பிரிவு, பொறியாளர் பிரிவு, கணினி பிரிவு மற்றும் பொது சுகாதாரபிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர் நிரப்ப தீர்மான எண்.1749 நாள். 11.01.2021—ன்படி ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் பேரில் 18.01.2021—ந் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | FASHION COMPUTERS 5/28A, THAMARI COMPLEX, P.K ROAD, KANGEYAM | ரூ.4500.00 |
| 2 | DURGA COMMUNICATIONS, P.K ROAD, KANGEYAM | ரூ.4900.00 |
| 3 | SRI VINAYAGA INSTA INFOMATICS, J.J COMPLEX, OPP BUS DEOP. P.K ROAD. KANGEYAM | ரூ.4700.00 |

**அலுவலகக் குறிப்பு:—**

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் கண்டுள்ள FASHION COMPUTERS 5/28A, THAMARI COMPLEX, P.K ROAD, KANGEYAM விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக இருப்பதால் விலைப்புள்ளியை மன்றம் ஏற்காலம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1758 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:8

கோப்புஎண்.1756/2016/அ2

காங்கயம் நகாட்சிக்குசொந்தமான சைக்கிள் ஸ்டேண்டு மற்றும் பழையப் பேருந்து நிலைய நவீன கட்டணக் கழிப்பிடம் குத்தகைவசூல் செய்யும் உரிமைகாலம் 31.03.2021 உடன் மூன்றாண்டு முடிவடைவதால் மேற்கண்ட இரண்டு குத்தகை இனம் ஒப்படைக்கும் தேதிமுதல் மூன்றாண்டு காலத்திற்கு (01.04.2021 முதல் 31.03.2024 வரை)பொது ஏலம்விடமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1759 . நாள்.29.01.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:9

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பழையப் பேருந்து நிலையக் கடை எண்கள் 20,25,26,29,30 ஆகிய கடைகளின் குத்தகை காலம் 31.01.2021 உடன் முடிவடைகிறது. மேலும் 20,29,30 ஆகிய குத்தகைதாரர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் நடப்பு குத்தகை தொகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையுடன் குத்தகை காலத்தை 01.02.2021 முதல் 31.01.2024 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

| வ. எண் | பெயர்& கடை எண் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | 2021–2023 கான மாதவாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. ரஃப்யுதின் பழையப் பேருந்து நிலையக் கடை எண்.20 | 01.02.2021 முதல் 31.01.2024 வரை | ரூ.4313/– | ரூ.647/– | ரூ.4960/– |
| 2. | திரு.முகமது இப்ராஹிம் பழையப் பேருந்து நிலையக்கடைண்.29 | | ரூ.6325/– | ரூ.949/– | ரூ.7274/– |
| 3. | திரு.நசீர் உல்லா பழையப் பேருந்து நிலையக்கடைண்.30 | | ரூ.6325/– | ரூ.949/– | ரூ.7274/– |

1. மேற்படி கடையின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 15% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் கடை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1760 . நாள்.29.01.2021**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்புஎண்.2070/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் வியாழன் சந்தையின்குத்தகை காலம் 31.01.2021 உடன் முடிவடைகிறது. மேலும் குத்தகைதாரரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் கீழ்காணும் வியாழன் சந்தையின் நடப்பு குத்தகை தொகையுடன் 5% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.02.2021 முதல் 31.01.2022 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பெயர்& கடை எண் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 5% உயர்வு செய்யப்பட்ட தொகை | 2021–2023 கான மாதவாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. D.சக்திவேல் வியாழன் சந்தை | 01.02.2021 முதல் 31.01.2024 வரை | ரூ.1,33,500/– | ரூ.6675/– | ரூ.1,40,175/– |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்படி ஆண்டு குத்தகை இனத்தின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 5% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் சந்தையின் உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1761 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**ந.க எண் 481/2020/எப்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் டெங்கு மற்றும் தண்ணீரால் பரவும் நோய்கள் மற்றும் கொரோனா பற்றிய விழிப்புணர்வு பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் வீடு வீடாக சென்று மல்டி கலர் ஸ்டிக்கர் கதவுகளில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மேலும் தினசரி வீட்டுக் குப்பைகளை தரம் பிரித்து மக்கும், மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து கொடுப்பது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கொரோனா விழிப்புணர்வு நோட்டிஸ் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பற்றிய விழிப்புணர்வு நோட்டிஸ், மல்டிகலர் அச்சடித்து வாங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான கோவில்பட்டி சிறு தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட். எனும் நிறுவனதாரிடம் விநியோகம் செய்திட அதற்கான தொகை வழங்க நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.
உத்தே மதிப்பீட்டு தொகை ரூ. 3.00 இலட்சம்

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1762 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**ந.க எண் 195/2019/எச்1**

காங்கயம் நகராட்சியில் வார்டு 1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு, புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் பூர்த்தி செய்யயப்பட்ட விண்ணப்ப படிவங்களை ஆட்களை கொண்டு கணினியில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிக்காக நபர் ஒருவருக்கு, ஒரு நாளைக்கான விலைப்புள்ளி, கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **உள்ளூர் கணினி நிறுவனங்கள்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | Fashion Computers. Kangeyam | ரூ. 350/– |
| 2 | Sri Vinayaga Insta Infomatices, kangeyam | ரூ. 370/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர். Fashion Computers. Kangeyam அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1763 . நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

ந.க.எண்.195/2019/எச்1

காங்கயம் நகராட்சியில் வார்டு 1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/– வழங்கும் திட்டம் விண்ணப்ப படிவம் 9500 எண்ணிக்கையில் அச்சிட்டு சப்பளை செய்தல் பணிக்காக உள்ளூர் அச்சக உரிமையாளர்களிடம் விலைப்புள்ளி கோரியதில் ஐந்து பக்கங்கள் கொண்ட ஒரு செட் விண்ணப்பத்திற்கு கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | அச்சக உரிமையாளர்களிடம் | தொகை ரூ. (ஐந்து பக்கங்கள் கொண்ட ஒரு செட் விண்ணப்பத்திற்கு) |
|---|---|---|
| 1 | VALAMPUREE OFFSET, LGGS காலனி, மெயின்ரோடு, காங்கயம் –638701. | ரூ.10.00 /– |
| 2 | DHANABAL POWER PRESS, 100, ராஜாஜி வீதி, காங்கயம் – 638701. | ரூ.10.50 /– |
| 3 | VIVEKANANDHA OFFSET, 21, வினோபா வீதி, காங்கயம் – 638 701. | ரூ.11.00 /– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்.VALAMPUREE OFFSET, LGGS காலனி, மெயின்ரோடு, காங்கயம் **–638701** அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1764. நாள்.29.01.2021**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி